DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 23- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | சுப்பிரமணியன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராவுத்தர் | சமயம் | - | |
| கிராமம் | - | பன்னீமேடு எஸ்டேட் பேக்டரி டிவிசன் | வயது | - | 47/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-07-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு CrImp.No.234/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ராஜாம்ராம் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை ஆவார் என்றால் எனது மனைவியின் அக்கா மகன் ஆவார். எனக்கு மகன் உறவுமுறையாவார். மேற்படி ராஜாராம் எதிரி தர்மலிங்கத்தின் மீது இதுநாள் வரை ஏதாவது புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. கழிவுநீர் அடைத்ததாக நிர்வாகத்தில் யாராவது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பவித்ரா என்பவர் எனக்கு எத்தனை மணிக்கு போன் செய்தார் என்றால் 24-05-2023-ம் தேதி 03.00 மணியளவில் போன் செய்தார். நான் அந்த நேரத்தில் எங்கு இருந்தேன் என்றால் எனது வீட்டில் இருந்தேன். பவித்ராவின் போன் நம்பர் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. பவித்ரா தனிப்பட்ட முறையில் எதிரி தர்மலிங்கம் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. பவித்ரா வீட்டிற்கு நான் எத்தனை மணிக்கு போனேன் என்றால் போன் செய்தவுடன் நான் அங்கு சென்றுவிட்டேன். போகும்போது சண்டை நடந்துகொண்டிருந்தது. நான் பவித்ரா வீட்டிற்கு போகும்போது ராஜாராம் அங்கிருந்தாரா என்றால் இருந்தார். எதிரி தர்மலிங்கம் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடைபட்ட தூரம் எவ்வளவு என்றால் 200 அடி இருக்கும். எனது வீட்டிற்கு தர்மலிங்கம் வரவில்லை என்றால் சரிதான். பன்னீமேடு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் நான் சென்றேன் என்றால் சரிதான். பன்னீமேடு மருத்துவமனைக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஆம்புலன்ஸை ஓட்டிவந்த ஓட்டுனர் யார் என்றால் வர்க்கீஸ் என்பவர் ஓட்டிவந்தார். வால்பாறை மருத்துவமனைக்கு நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் சுமார் 06.00 மணி இருக்கும். என்னுடன் ஆம்புலன்ஸில் வேறு யாரு வந்தது என்றால் எனது மனைவி வசந்தாவும், மருமகள் பவித்ராவும் வந்தார்கள். பன்னீமேடு மருத்துவமனையில் எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் யார் என்றால் மருத்துவர் அன்று இல்லை நர்ஸ்தான் பார்த்தார்கள். நான் என்னவகுப்பு படித்துள்ளேன் என்றால் 8-ம் வகுப்பு

படித்துள்ளேன். போலீசார் மருத்துவமனைக்கு வந்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 24-05-2023-ம் தேதி மாலை சுமார் 06.00 மணி இருக்கும். நேரம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 24-05-2023-ம் தேதிக்கு பின்பு இன்றைய தேதிவரை என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 25-05-2023-ம் தேதி என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மறுநாள் காலையில் போலீசார் வந்து விசாரித்தார்கள். புகார் நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 24-ம் தேதி கொடுத்தேன். எனக்கு தலைக்காயம் எதுவும் ஏற்பட்டு இருந்ததா என்றால் இல்லை. புகாரை நான் படித்துப்பார்த்து பின்புதான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். தற்போது எனக்கு வயது என்ன என்றால் 47 ஆகும். புகாரில் புகார் கொடுத்த தேதியில் எனக்கு வயது 49 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே வழக்கு சம்பவம் நிகழ்திருந்தால் போலீசார் விசாரணையில் வயதையாவது சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் எஸ்டேட்டில் மருந்து அடிக்கும் கூலி வேலை செய்து வருகிறேன். நான் அரசியல் கட்சியின் கிளை செயலாளராக இருக்கிறேனா என்றால் அரசியலில் இல்லை நான் வேலை செய்யும் பன்னீமேடு எஸ்டேட்டில் ஒரு டிவிசன் கமிட்டியில் பொருப்பில் இருக்கிறேன். அன்றைய தினமே எதிரி தர்மலிங்கம் வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்மீது எதிரி தர்மலிங்கம் ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் வழக்கு பதிவு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி தர்மலிங்கம் கொடுத்த புகாரில் போலீசார் இதுவரை என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை. நான், பவித்ரா, ராஜாராம் ஆகிய மூவரும் ஒன்றுசேர்ந்து எதிரியை அடித்துவிட்டு ஆளும் கட்சியின் கமிட்டி பொறுப்பில் இருப்பதால் அதனை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக தவறாக புகார் கொடுத்து நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில் தவறாக புகார் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 23- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | பவித்ரா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | ராஜாராம் | சமயம் | - | |
| கிராமம் | - | பன்னீமேடு எஸ்டேட் பேக்டரி டிவிசன் | வயது | - | 29/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-07-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Crlmp.No.234/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் எத்தனை வருடங்களாக பன்னிமேடு எஸ்டேட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் திருமணம் ஆன நாளிலிருந்து கடந்த 8 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் வருவதற்கு முன்பிலிருந்தே எதிரி தர்மலிங்கம் அங்கு குடியிருக்கிறார் என்றால் சரிதான். அடிக்கடி எதிரி தகராறு செய்வதாக நானும் எனது கணவரோ எதிரி மீது ஏதேனும் புகார் கொடுத்துள்ளோமா என்றால் நிர்வாகத்தில் மட்டும் வாய்மொழியாக புகார் கொடுத்தோம். அந்த புகாரில் மீது நிர்வாகம் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை. உண்மையிலேயே நான் சொல்வது போல சம்பவம் நடந்திருந்தால் நிர்வாகத்தில் நடவடிக்கை எடுத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி அடிக்கடி தகராறு செய்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. எதிரி தர்மலிங்கம் வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கழிவுநீர் சுத்தம் செய்தது எங்களது வீட்டிலா அல்லது எதிரியின் வீட்டிலா எதிரியின் வீட்டில்தான் கழிவுநீர் சுத்தம் செய்வது என்றால் நிர்வாகத்தில் சொல்லி தான் சுத்தம் செய்யவேண்டும். எதிரி நிர்வாகத்திற்கு சொல்லாமல் செய்தால் அது பற்றி பேசிக்கொண்டிருந்தபோது தான் எதிரி குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்தார். எதிரி அவரது செலவில் கழிவுநீர் சுத்தம் செய்தார் என்றால் சரிதான். உண்மையிலேயே அவர் கழிவுநீர் சுத்தம் செய்ததால் எங்களையும் நிர்வாகத்திலிருந்து எங்களது செலவில் எங்களது வீட்டில் உள்ள கழிவுநீரை சுத்தம் செய்ய நிர்வாகத்திலிருந்து சொல்வார்கள் என்பதற்காக நாங்கள் தான் எதிரியை பிரச்சனை செய்வோம் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு என்ன வேண்டும் என்றால் எனது கணவரின் சித்தப்பாஆவார். அ.சா.1 கொடுத்த தவறானபுகாருக்கு அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையதாகும் **(அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**மறு குறுக்குவிசாரணை**

நான் புகார் வாக்குமூலத்தில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் 24-05-2023-ம் தேதி மாலை சுமார் 07.00- 07.30 மணியளவில் கையொப்பம் செய்துவிட் டேன். 24-05-2023-ம் தேதிக்கு பின்பு போலீசாரிடம் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 24-05-2023-ம் தேதிக்கு பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 23- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | நந்தினி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுதர்சன் | சமயம் | - | |
| கிராமம் | - | பன்னீமேடு எஸ்டேட் பேக்டரி டிவிசன் | வயது | - | 29/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-07-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Crlmp.No.234/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் பன்னிமேட்டில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 4 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். சுப்பிரமணி வீட்டிற்கும் தர்மலிங்கம் வீட்டிற்கும் கொஞ்ச தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்குசென்றேன் என்றால் 03.00 மணிக்கு போனேன். நான் போகும்போது ராஜராம் அங்கிருந்தாரா என்றால் இருந்தார். நான் போகும்போது ராஜாராமும் தர்மலிங்கமும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பவித்ராவும் அங்கு இருந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்பு சுப்பிரமணி வேகமாக நடந்துவந்தார் என்றால் சரிதான். பன்னிமேடு மருத்துவமனைக்கு யார் போன் செய்தது என்றால் சுப்பிரமணியனின் மனைவி போன் செய்தார். அவர் அங்கிருந்தாரா என்றால் இல்லை. வேலைக்கு சென்றிருந்தார் தகவல் தெரிந்து அங்கு வந்தார். சுப்பிரமணியனின் மனைவிக்கு தகவல் யார் சொன்னது என்றால் தெரியாது. தர்மலிங்கத்திற்கும் சுப்பிரமணியனுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு நான் அங்கு போகும்போது சண்டை நடந்துகொண்டிருந்தது. நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறிவில்லை என்றாலும் வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் அல்ல என்றாலும் சரியல்ல. சுப்பிரமணியனின் வீடும் எனது வீடும் பக்கம் பக்கம் உள்ளதா என்றால் இல்லை. மேல் லயனில் சுப்பிரமணியன் இருக்கிறார் நாங்கள் கீழ் லயனில் இருக்கிறோம். சுப்பிரமணி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.